மாகக் கொடுப்பது என்றும், ஊராட்சி ஒன்றியம் 4 ஆயிரம் ஈட்டுத் தொகை கொடுப்பது என்று ஏற்படுத்தியிருக்கிறோம். பொதுவாக ஊராட்சி ஒன்றியங் களின் நிதியைப் பெருக்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : பல நர்சரி பள்ளிக்கூடங்கள் இருக் கின்றன. அவற்றில் படிக்கும் மாணவர்களை மேலே சேர்ப்பதில் பல சிக்கல்கள் இருக்கின்றன. அதை நீக்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பார் களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அரசாங்கத்தைப் பொறுத்த வரை துவக்கப்பள்ளிகளைத்தான் ஏற்படுத்துகின்றன. நர்சரிகள் தனியார் களிடம் விடப்படுகின்றன. அங்கே படிக்கின்ற மாணவர்களை மேலே சேர்ப்பதில் சிக்கல்கள் இருந்தால் அவற்றை நீக்க முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்படும்.

மிட்டூர் அரசு உயர்நிலைப்பள்ளிக் கட்டடம்

*501 வினா—**திரு. எம். ஏ. லத்தீப் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வாணியம்பாடித் தொகுதி மிட்டூரில் உள்ள அரசினர் உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியரிடமிருந்து அப்பள்ளி கட்டடக் குழுவினரால் 1971 ஜூலை திங்களில் வசூல் செய்யப்பட்ட பணம் தொடர்பாக புகார் முறை யீடொன்று அமைச்சரிடம் கொடுக்கப்பட்டதா ?

(இ) இது தொடர்பாக அரசு விசாரணைக்கு உத்திரவிட்டிருக்கின்றதா ?

(உ) ஆமெனில், அவைகளின் விபரங்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) ஆம்.

(உ) பள்ளி கல்வி இயக்குநரின் அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

தொல்பொருள் ஆய்வுத்துறை

*502 வினா—**திரு. பெ. மலைச்சாமி :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் பழங்கால வரலாற்றுச் சிறப்பு மிக்க நினைவுச் சின்னங்கள் புதை பொருட்கள், ஆகியவற்றினைக் கண்டறிய தொல்பொருள் ஆய்வுப் பிரிவில் சிறப்புப் பிரிவு அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?